**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ஓ.மு.எண்.2811/ஆ5/2023, நாள். 05.07.2023**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் சிப்பாய் புரட்சி தினத்தை முன்னிட்டு 2023 ஜுலை 10ம் தேதி ஓவியப் போட்டி வேலூர் கோட்டையில் உள்ள அரசு அருங்காட்சியத்தில் நடைப்பெற உள்ளது – 6 முதல் 9–ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்கள் ஓவியப் போட்டியில் கலந்து கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை வேலூர், வேலூர் கோட்டை, அரசு அருங்காட்சியகம், காப்பாட்சியரின் கடித ந.க.எண்.44/2023, நாள். 04.07.2023

•••••

பார்வை 1–ல் காணும் கடிதத்திற்கிணங்க, வேலூர் மாவட்டம், சிப்பாய் புரட்சி தினமான ஜுலை 10–ம் தேதி முன்னிட்டு வேலூர் அரசு அருங்காட்சியகம் மற்றும் தமுஎகச சார்பில் பள்ளி மாணவர்களின் கலைத்திறனை ஊக்கப்படுத்தும் வகையில் **6–ம் வகுப்பு முதல் 9–ம் வகுப்பு வரை பயிலும்** மாணவ / மாணவியருக்கான ஓவியப்போட்டி **10.07.2023 (திங்கட்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை வேலூர் கோட்டையில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் நடைபெற உள்ளது.**

இப்போட்டியில் ஆர்வமுள்ள 6ம் வகுப்பு முதல் 9–ம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்கள் 09.07.2023 அன்று தங்களது பெயரை வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். பெயரை பதிவு செய்த மாணவர்கள் மட்டுமே ஓவியப்போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள். பள்ளி ஒன்றுக்கு 2 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். ஓவியப்போட்டிக்கான ஓவிய தாள் மட்டுமே அருங்காட்சியகத்தில் வழங்கப்படும் ஏனைய பொருட்களை மாணவர்களே கொண்டு வரவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>ஓவியப் போட்டியின் தலைப்பு – வேலூர் சிப்பாய் புரட்சி (Vellore Revolt)</u>

எனவே பள்ளி ஒன்றுக்கு 2 மாணவர்கள் என்ற விதத்தில் அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளியில் 6ம் வகுப்பு முதல் 9–ம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்கள் மேற்காண் ஓவியப் போட்டியில் கலந்துக் கொள்வதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலை பள்ளி தலைமையாசியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசியர்கள்,
அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலை /
உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.

நகல்–
1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி)
   வேலூர் மாவட்டம் (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
2. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம்
   (வட்டாரக் கல்வி அலுவலர் மூலமாக நடுநிலைப் பள்ளிகளுக்கு தெரிவிக்கும் பொருட்டு)
3. காப்பாட்சியர்,
   அரசு அருங்காட்சியகம், வேலூர் கோட்டை,
   வேலூர் மாவட்டம் – 632 004.